முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2018 சனவரி

# (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

(Business operations and management)

2018-01-28
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) *பரீட்சைக்கு விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *உங்களுக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில் விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *உங்களால் ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல்*** *நிரல் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள், செயல் வினைச்சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தை*** *அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்ட விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் மனித விருப்பத்திற்கான (human want) ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) உணவு (2) உடை (3) பாண் (4) உறையுள்

**1.2** வியாபார நிறுவனம் ஒன்றிற்கான நோக்கங்களை அமைக்கும்போது ஒரு விதிமுறையாக (criterion) **அமையாதது** பின்வருவனவற்றுள் எது?

(1) குறிப்பிடத்தக்கது (Specific) (2) அளவிடத்தக்கது (Measurable)

(3) யதார்த்தமானது (Realistic) (4) அடைய முடியாதது (Unachievable)

**1.3** பின்வருவனவற்றுள் ஒரு துணைச் சேவையாக (auxiliary service) இருப்பது எது?

(1) வங்கியியல் (2) தொடர்பாடல் (3) போக்குவரத்து (4) மேலுள்ள அனைத்தும்

**1.4** பின்வரும் பங்காளர்களில், பங்குடமை ஒன்றிலிருந்து சம்பளங்களையும் கூலிகளையும் பெறுவதற்கு உரித்துடைய பங்காளர் யார்?

(1) அமைதிப் பங்காளர் (2) இயங்கும் பங்காளர்

(3) வரையறுக்கப்பட்ட பங்காளர் (4) உறங்கும் பங்காளர்

**1.5** பின்வருவனவற்றுள் ஒரு பிரதான தரவுத்தள (database) வகை **அல்லாதது** எது?

(1) செயற்பாட்டுத் (operational) தரவுத்தளம் (2) விநியோகிக்கப்பட்ட (distributed) தரவுத்தளம்

(3) அக இணையத் (intranet) தரவுத்தளம் (4) வெளிவாரி (external) தரவுத்தளம்

**1.6** பின்வருவனவற்றுள் தகவல் முகாமைத்துவத்தின் (Information management) ஓர் அனுகூலமாக **அமையாதது** எது?

(1) வரிப் பொறுப்புக்களைக் குறைப்பது

(2) முக்கிய தகவல்களைப் பாதுகாப்பது

(3) வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவது

(4) செயற்பாட்டுக் கிரயத்தைக் குறைப்பது

**1.7** பின்வருவனவற்றுள் காப்புறுதி உடன்படிக்கை ஒன்றின் ஓர் அடிப்படை அம்சமாக இருப்பது எது?

(1) ஒரு செல்லுபடியான ஒப்பந்தம் (2) காப்பீட்டு நலன் (Insurable interest)

(3) மிகுந்த நல்ல நம்பிக்கை (utmost good faith) (4) மேலுள்ள அனைத்தும்

**1.8** பின்வருவனவற்றுள் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளின் (Private limited companies) ஓர் பிரதிகூலமாக அமைவது எது?

(1) வரையறுக்கப்பட்ட பொறுப்பு

(2) பாரியளவு நடவடிக்கைகள் பொருளியல் சிக்கனத்தைக் கொண்டுவருதல்.

(3) குறிப்பிட்ட வரிவிலக்குகளுக்கான உரிமைகள்.

(4) பொதுமக்களுக்கு பங்குகளை விநியோகிக்க முடியாததன் காரணமாக மூலதனம் வரையறுக்கப் பட்டதாக இருத்தல்.

**1.9** புதிய பிரவேசிப்பாளர்களின் (new entrants) அச்சுறுத்தலுக்கான ஒரு காரணமாக இருப்பது

(1) வாங்குவோரின் பேரம்பேசும் சக்தி (2) பொருள் வேறுபாடு

(3) பிரதியீட்டுப் பொருட்களின் அச்சுறுத்தல் (4) வழங்குநர்களின் பேரம்பேசும் சக்தி

**1.10** பின்வருவனவற்றுள் இயலளவு முகாமைத்துவத்தின் (Capacity management) திட்டமிடலையும் கட்டுப் படுத்தலையும் **உள்ளடக்காத** நடவடிக்கை எது?

(1) மனித வள முகாமைத்துவம் (HRM)
(2) சுமையேற்றம் (Loading)
(3) வரிசைமுறை (Sequencing)
(4) கண்காணித்தல் (Monitoring)

**1.11** போட்டரின் பெறுமதிச் சங்கிலியின் (Porter’s Value Chain) கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு துணை நடவடிக்கை:

(1) வெளிச்செல்லும் தளவாட வழங்கல்கள் (Outbound logistics)
(2) சந்தைப்படுத்தலும் விற்பனையும் (Marketing and Sales)
(3) பெறுகை (Procurement)
(4) உள்வரும் தளவாட வழங்கல்கள் (Inbound logistics)

**1.12** பின்வருவனவற்றுள் மனித வளங்களின் மிகையைக் கையாள்வதற்கான மிகப் பொருத்தமான தந்திரோபாயமாக அமைவது எது?

(1) ஊழியர்களை மீள அழைத்தல்
(2) பகுதி நேர ஊழியர்களை வாடகைக்கமர்த்தல்
(3) ஊழியர்களை முன்கூட்டியே இளைப்பாற அனுமதித்தல்
(4) முழு நேர ஊழியர்களை வாடகைக்கமர்த்தல்

**1.13** வேலை விவரணம் (Job description) ஒன்றின் பிரதான கூறொன்றாக இருப்பது:

(1) வேலைக்குரிய கடமைகள்
(2) கல்வித் தகைமைகள்
(3) வேலை அனுபவம்
(4) பயிற்சியும் திறன்களும்

**1.14** சந்தைப்படுத்தல் தத்துவத்திலுள்ள தரத்தின் அதிகரிப்பு என்பது கீழ்வரும் எந்த எண்ணக்கருவின் ஓர் உத்தி (tactic) ஆகும்?

(1) உற்பத்தி எண்ணக்கரு
(2) பொருள் எண்ணக்கரு
(3) சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
(4) விற்பனைப்படுத்தல் எண்ணக்கரு

**1.15** பின்வருவனவற்றுள் எது மேம்படுத்தல் கலவையின் (Promotion mix) ஓர் கருவி (tool) ஆகும்?

(1) விற்பனை மேம்படுத்தல்
(2) மக்கள் தொடர்புகள்
(3) நேரடிச் சந்தைப்படுத்தல்
(4) மேற்கூறிய அனைத்தும்.

***1.16*** *முதல்* ***1.20*** *வரையுள்ள வினாக்களின் இடைவெளிகளை நிரப்புவதற்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களிலிருந்து சரியானதைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** .................... *[அலுவலகத் தன்னியக்க முறைமை (OAS)] / கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டு முறைமை (TPS)]* என்பது ஓர் அறிவு மட்ட தகவல் முறைமையாகும்.

**1.17** தனிநபர்களின் அனுபவங்களின் அடிப்படையில் அவர்களில் பதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட அறிவு .................... *(வெளிப்படையான அறிவு / மறைமுக அறிவு)* எனப்படுகிறது.

**1.18** .................... *(செயற்பாடு [Performance] / உபசாரம் [Courtesy])* என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான தரத்தின் ஓர் பரிமாணம் ஆகும்.

**1.19** ................. *(வகிபாகமேற்று நடித்தல் / வெளியகப் பயிற்சி)* என்பது வேலைத்தலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நடித்துக் காட்டுவதற்கு ஊழியர்களை அனுமதிக்கின்ற ஒரு பயிற்சி முறையாகும்.

**1.20** .................... *(அளவிட முடியாதது / வேறுபடுத்தக்கூடியது)* என்பது பயனுறுதிமிக்க சந்தைத் துண்டமொன்றின் ஓர் பண்பியல்பாகும்.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A இன் முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் சட்ட ஆளுமை மிக்கதும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்டதுமான நிறுவனங்கள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் என அறியப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளும் (Public Limited Companies) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளும் (Private Limited Companies) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகும்.

(a) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளுக்கும் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) (i) கம்பனிகளுக்கு பயனுறுதிமிக்க தொடர்பாடல் ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் நான்கைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(ii) தமது நாளாந்த நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக வியாபார நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்தப்படும் உள்ளகத் தொடர்பாடல் கருவிகள் (tools) இரண்டினைக் (02) **கூறுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

பெரும்பாலான நிறுவனங்களில், நிறுவனத்தின் மையப்பகுதியாக இருக்கின்ற நடவடிக்கைச் செயற்பாட்டுப் பகுதியானது வாடிக்கையாளர்களுக்கான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக ஏனைய செயற்பாட்டுப் பகுதிகளையும் வழங்குநர்களையும் தொடர்புபடுத்துகிறது. இது வழங்கல் சங்கிலி, தரம், தொக்கு மற்றும் இயலளவு முகாமைத்துவம் போன்ற குறிப்பிடத்தக்க பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

(a) சேவைகளின் பண்பியல்கள் (characteristics) நான்கினைக் (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(b) நிறுவனம் ஒன்றிற்கு தொக்கு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

நிறுவனமொன்றின் வெகுமதி முகாமைத்துவம் என்பது தமது ஊழியர்களுக்கு வழங்கப்படும் நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத நன்மைகள் பற்றிய தீர்மானங்கள் எடுத்தல் உள்ளிட்ட ஒரு செயன்முறையாகும். இது தொழில்தருநர் மற்றும் ஊழியர் உறவினை மேம்படுத்தி ஊழியர்களின் மனக்குறைகள் மற்றும் பிணக்குகளைக் குறைப்பதன் ஊடாக தொழில்தருநர் மற்றும் ஊழியர்களிடையே ஒரு வலுவான உறவினைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகிறது.

(a) ஊழியர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்படும் வெகுமதிகளைத் தீர்மானிக்கின்ற இரண்டு (02) உள்ளகக் காரணிகளையும் இரண்டு (02) வெளிவாரிக் காரணிகளையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) மனக்குறைகளைக் (grievance) கையாளும் செயன்முறை ஒன்றின் படிநிலைகளை (steps) **விபரிக்குக.**

(06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

சந்தைப்படுத்துநர்கள் கம்பனியின் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை விருத்திசெய்தல் வேண்டும். ஒரு சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் பல்வேறு உத்திகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றின் மிக முக்கிய கூறான சந்தைப்படுத்தல் கலவையானது (Marketing Mix) சந்தைப்படுத்தலின் 4 'p's என அழைக்கப்படுகிறது.

(a) சந்தைப்படுத்தல் கலவை (4'p's) இனை **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(b) இலாப நோக்கற்ற நிறுவனங்களில் சந்தைப்படுத்தலைப் பயன்படுத்துவதன் நன்மைகள் இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**∴பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** தனது வியாபார நடவடிக்கைகளை 1982 ஆம் ஆண்டு கண்டியில் ஆரம்பித்தது. அதன் பின்னரான காலப்பகுதியில் கம்பனியால் தனது உற்பத்திச் செயற்பாடுகளை காலி மற்றும் குருநாகல் பிரதேசங்களில் விரிவாக்கக்கூடியதாக இருந்தது. யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கம்பனியால் தனது புதிய தொழிற்சாலையை திருகோணமலையில் திறப்பதற்கு இயலுமாக இருந்தது. ஆரம்பம் முதலே **∴பெஷன் கார்மென்ட்ஸ்** ஐக்கிய இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் தரமான துணிகளில் தயாரிக்கப்படும் சிறுவர்களுக்கான ஆடைகளைத் தயாரிப்பதில் பிரசித்திபெற்றிருந்தது.

2016 இல் சர்வதேச வியாபாரத்தில் வளர்ந்து வரும் அண்மைய போக்குகளைக் கருத்திற்கொண்டு, கம்பனியின் பணிப்பாளர் சபையானது பங்களாதேசில் ஒரு புதிய தொழிற்சாலையைத் தாபிப்பதன் மூலம் வெளிநாட்டுச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானித்தது. இதற்கு அண்மைய எதிர்காலத்தில் பங்காளதேசுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு இலங்கை அரசாங்கம் நாட்டம் கொண்டிருக்கின்ற செய்தியும்கூட வலுச் சேர்த்திருந்தது.

பங்காளதேஷ் அரசாங்கம் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட வரி விலக்குகளை மீளப்பெறுவதற்கான தனது நாட்டத்தினை வெளிகாட்டியது. மற்றொரு வகையில், இலங்கை அரசாங்கமும் நிறுவன வரி வீதத்தை (corporate tax rate) 15% இலிருந்து 28% ஆக அதிகரிப்பதற்கு முடிவெடுத்தது.

இந்தியா, சீனா மற்றும் பங்களாதேஷ் ஆடை உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திகளின் கிரயம் மற்றும் விலை ஆகிய இரண்டினதும் அடிப்படையில் போட்டியிடுகின்றனர் என்பதை அண்மைய ஆய்வு ஒன்று அறிக்கைப்படுத்தியுள்ளது.

2017 செப்ரெம்பரில், **∴பெஷன் கார்மென்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இன் ஊழியர்கள், சகல அதன் தொழிற்சாலைகளிலும் நல்ல வேலைச் சூழல் ஒன்றினைக் கோரியும் ஊழியர்களின் மேலதிக நேரத்தைக் வரையறைப்படுத்துவதற்கான (restrict) முகாமையின் தீர்மானத்திற்கு எதிராகவும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கியிருந்தனர். அண்மையில் ஏற்பட்ட இந்தப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு ஊழியர்களுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கான ஆற்றல் மனித வள முகாமையாளரிடம் காணப்படாமையால் அவர் தனது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) உலகமயமாதலுக்கு வெளித்திறப்பதன் (exposure to globalization) ஊடாக **∴பெஷன் கார்மன்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இனால் எதிர்நோக்கப்படுகின்ற இரண்டு (02) வாய்ப்புகளையும் இரண்டு (02) அச்சுறுத் தல்களையும் **அடையாளங் காண்க**. (04 புள்ளிகள்)

(b) PEST பகுப்பாய்வினைப் பயன்படுத்தி **∴பெஷன் கார்மன்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இன் சூழலை **மதிப்பிடுக.** (08 புள்ளிகள்)

(c) புதிதாக நியமனம் செய்யப்பட்ட மனித வள முகாமையாளர் அதன் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையை மீள வடிவமைப்பதற்குத் தீர்மானித்திருக்கிறார்.

செயலாற்றுகை மதிப்பீடுகளின் செயன்முறையை வலுப்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டிய படிமுறைகளைக் (steps) **கூறுக.** (04 புள்ளிகள்)

(d) **∴பெஷன் கார்மன்ட்ஸ் (பிரை.) லிமிட்.** இன் வாடிக்கையாளர்களை இலக்கு வைப்பதற்கு பொருள் நிலைப்படுத்தல் (product positioning) ஏன் முக்கியமானது என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |